உ

ஸ்ரீகாமாக்ஷி அம்மன் துணை

ஸ்ரீ அம்பாள் அருள் பெற்ற

கோட்டையா நாயகர்

அருளிய

ஸ்ரீகாமாக்ஷி அம்பாள் அகவல்



வெளியிடுவோர்:

போன் :30[illegible]5

ஸ்ரீ கௌரி சில்க்,

பட்டு ஜவுளி உற்பத்தி & விற்பனையாளர்கள்,

நெ. 69, காந்தி ரோடு, காஞ்சிபுரம்-631501.

—இலவச வெளியீடு—

உ

ஸ்ரீ அகஸ்தியர் அருளிய
அம்பாள் துதி

சுத்தபரிபூரணி, சர்வேந்திரியாமி,
சுருதிமுனைக் கெட்டா சுயம்பிரகாசி,
மத்தகரிமுகனை பெற்ற கௌரி, சக்திமாதேவி,
மறைகள் முதற் கெட்டா ஜோதி,
சக்திசிவ சங்கரியே, ஸ்யாமளாங்கி,
ஸர்வலோக சரணி, சதாசிவந் தந்தேவி,
எத்திசையும்புகழ் நட்டனத்தரசி, அம்பாள் ஈஸ்வரியே
கருணை செய், இங்கிறைஞ்சிற்றேனே. 1

கருணைஎனும் பேரமிர்தம் ஜீவருக்குக்
கருணையுடன் தந்திடுவாய் அதனை எவ்வார்
மருளுமனங் கொண்டவர்கட் கருளுவோம்யாம்
அன்னாய்நீ அன்புடனே ஆதரித்து
இருளுமனம் நீங்கியேதான் எந்தபோதும்
என்னெஞ்சம் உன்னடியை மறவாதிருக்க
பொருள்வடிவே புகழ்வடிவே உருவடிவே
புனிதமெதோ அதைசெய்து எனைநடத்தே 2

நடத்துவது உனது உயர் செயலதல்லால்
நானேதும் அறியேனே ஆனாலும்தான்
கடத்தையும் நான்என்னும் மோர் அபிமானம்
நானேனோ வைத்துத்தான் உழலுகின்றேன்
திடத்துருமோர் செயலதனை தந்துநீயோ
என்றென்றும் உன்னடிமை என்றே என்னை
அடலுறவே செய்குவையேல் மகிழ்வடைவேன்
அடிமைக்கு அடையாளம் ஏதுகினே நீயருளே 3

—அம்பாள் துதி ஸம்பூர்ணம்—

3/3

உ

ஸ்ரீ காமாக்ஷி அம்மன் துணை

ஸ்ரீ அம்பாள் அருள் பெற்ற

கோட்டைய நாயகர்

அருளிய

ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் அகவல்



வெளியிடுவோர்:-

போன்: 3075

ஸ்ரீ கௌரி சில்க்,

பட்டு ஜவுளி உற்பத்தி & விற்பனையாளர்கள்

நெ. 69, காந்திரோடு, காஞ்சிபுரம்-631501.

—இலவச வெளியீடு—

அகவலை கூட்டியோ குறைத்தோ படிப்பதும் வெளியிடுவதும் மிக மிக பாவம். இதை அன்பர்கள் தவிர்க்க.

நூலாசிரியரைப் பற்றி......

"தொண்டை வளநாடு சான்றோருடைத்து" எனும் வாசகத்திற்கிணங்க தேசமெல்லாம் புகழ்ந்தாடும் கச்சியம்பதியில், வெள்ளைக்குளத் தெருவில் வன்னியர் குலத்தில் ஸ்ரீ கோட்டைய நாயகர் அவதரித்தார். ஸ்ரீ சந்தைவெளியம்மன் திருக்கோயிலின் அறங்-காவலராகத் தொண்டு செய்த இவர், அம்பாளின், பரிபூரண கடாக்ஷத்தினைப் பெற்று அம்மன் கருணையால் அம்மனுடன் நேரில் பேசும் வரமும் பெற்றுத் திகழ்ந்தார். இவர் ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் அகவல், பலதேவர் பாடல், ஸ்ரீ காமாக்ஷியம்மை தவம், கெங்கையம்மன் தவம் மற்றும் பல தெய்வீக நூல்களை அருளிச் செய்தார். பச்சையப்பன் சர்வகலாசாலைத் தலைமைத் தமிழ்ப் புலவர் வெண்பாப்புலி தி. சு. வேலுசாமிப் பிள்ளை மற்றும் பிள்ளையார்பாளையம் மணி, திருவேங்கட முதலியார் போன்ற பல அறிஞர்-கள் இவரது அருள் நூல்களுக்கு சான்றுக் கவிகள் நல்கியுள்ளனர். இவ்வளவு சிறப்பு வாய்ந்த, ஸ்ரீ கோட்டைய நாயகர் அருளிய "ஸ்ரீ காமாட்சி அம்பாள் அகவல்" நன்னூலை துன்மதி ஆண்டு நவராத்திரி விழாவில் வெளியிடச் செய்த திருவருளுக்கு நன்றி தெரிவித்து அன்பர்கள் யாவரும் அருள் நூலாம் இந் நன்னூலை நாள்தோறும் ஓதி பூமகள், நாமகள் அருள்பெறுவதுடன் முக்தி நலமும் பெற்றுய்ய, திருவருள் துணை செய்யுமாக.

உ

ஓம்

ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் அகவல்

விருத்தம்

ஜெகத்திருள் நீக்குங்காஞ்சி க்ஷேத்திரந்தன்னி லென்றும்
மகத்துவ மிகுந்த சக்தி மனோன்மணி காமாக்ஷி தன்மேல்
அகத்திரு ளகலும் வண்ணம் — அகவற் பாமாலை யோத
முகத்திரு ளகற்று மானை முளரிமா மலர்தாள் காப்பே.

ஓம் நமோ பகவதி உத்தமி கௌரி
சாம்பவி மனோன்மணி சங்கரி பயங்கரி
வெண்டலை மாலி விமலி யெண்டோளி
அண்டர்கள் போற்றும் ஆதி கங்காளி
விக்ரம சூலி வேதன் கபாலி
உக்ர கோலாகலி ஒளிர் மலைநீலி
பஞ்சாட் சரத்தி பரப்பிரம்ம சொரூபி
எஞ்சாக் கரத்தி இன்பத் தாண்டவி
பிரணவ சொரூபம் பெற்றிடும் வீரி
சரணும் புயத்தி சர்வ சம்மாரி.

மூவரு ருவாய் மோன வடிவாய்
யாவுந் தானா யியைந்த வடிவாய்ப்
புராதன மாகப் பொருந்திய பொருளே
பராபர மானபளிங் கொளி யாளே
அகிலாண்ட கோடி யாவு மளித்துச்
சகல உயிரினுஞ் சகளீ கரித்து
விண்மணி போலே விளங் கியதாயே
கண்மணி யாளே கருணை செய்வாயே
வேத முதலில் விளங்கிய வீரி
மாதவர் போற்றும் மகிட சம்மாரி
திரி கோணத்தி தேவி மனோன்மணி
அரிய சனந்தி அன்ன பூரணி
தத்துவப் பொருளாய்த் தழைத்த நன்மணி
அத்தி முகவனை அளித்த கண்மணி
சிறுவிதி மகவாய்ச் சிறந்த சிவமணி
ஒருதனி முதலாய் ஓங்கும் தவமணி
வரைமக ளெனவே வளர்ந்த நவமணி
பரைஎன நாமம் பகர்ந்தவர் பவப்பிணி
அகற்றி ஆட் கொள்ளும் அற்புத ஒளியே
சகமுழு தன்பர் சாற்றிடும் தெளிவே.
இருண்ட குழலும் எழில்மணி முடியும்
உருண்ட சடையும் உரக பூஷணமும்
திங்களைத் தரித்த திருமுகத் தொளியும்
பங்கயக் கண்ணும் படர்ந்த நெற்றியும்
துங்க பொற் பட்டமும் துலங்கு புண்டரமும்

செங்கனி வாயும் சிலை நுதனுசியும்
குலவிய மகரக் குண்டலச் செவியும்
வலம்புரிக் கழுத்தும் வச்சிரத் தோளும்
அகன்ற மார்பும் அழகிய வயிறும்
நிகண்ட கரமும் நீல மேனியும்
வஞ்சி இடையும் வர்ண பட்டுடையும்
செஞ்சீறடியும் செம் பொற் சிலம்பும்
வெண்டயம் பீலி விரல் மோதிரமும்
தண்டையுஞ் சதங்கையுந் தங்கக் கொலுசும்
ரத்தின மிழைத்த ரவை யொட்டி யாணமும்
பத்திரை மாற்றுப் பசும் பொற்கச்சும்
நத்து மூக்குத்தியும் நவமணித் தாலியும்
சித்திர மிலகும் செம் பொற்கிளியும்
வங்கி பொற் றொடியும் வாகு வலயமும்
தங்கக் கடகமும் தடப்புய கீர்த்தியும்
ஆரகே யூரமும் அரவ கங்கணமும்
தாரகை போன்ற தாழ்வட மாலையும்
சந்தனம் புனுகு சாந்து பன்னீரும்
விந்தைசேர் குங்குமம் விளங்கு ஜவ்வாதும்
மந்தாரை புன்னை மனோரஞ் சிதமும்
செந்தாழை ரோஜா செண்பக மலரும்
குருவேர்த் தும்பை கொங்கு மல்லிகையும்
மருவிரு வாக்ஷி மலர் பாரி ஜாதமும்
அலரி அம்புஜம் அறுகு வில்வமும்
கலவைச் சாந்தும் கற்பக மலரும்

அணிந்த மேனியும் அங்குச பாசமும்
மணிமந்தர வாளும் மான்மழு கடகமும்
டக்கை பல்லயம் டமரக சூலமும்
சக்கரம் ஈட்டி சங்கு கேடயமும்
பிண்டிடால் சூரி பிரம கபாலமும்
தெண்டாயுதமும் திகழ் வஜ்ஜிரா யுதமும்
கட்டாரி அம்பும் கண்டகோ டாலியும்
பட்டாக் கத்தியும் பரிசமும் வில்லும்
வேத்திரப் படையும் வேலா யுதமும்
மாத்திரைக் கோலும் மணி ஜெபமாலையும்
பட்டயந் தண்டு பால முசலமும்
வெட்டரி வாளும் விளங்குதோ மரமும்
குந்தா யுதமும் கோளரி துவசமும்
விந்தையாத் தரித்து விளங்கு மெண்கரமும்
வீரவாவேசமும் விபூதி ருத்ராட்ச மும்
ஆரவார மும் அகோர பார்வையும்
புயவலி மிகுந்த பூதங்கணங் களும்
வயிரவர் அஷ்ட வசு திசை பாலரும்
இயக்கர் விஞ்சையர் இருடி மாதவரும்
பயிரவி நின்கழல் பணிந்து கொண்டாடவும்
வண்மையாய்ச் சிங்க வாகன மேறி
வெண்குடை கவிய விளங்கிய விரி
குடமுழாக் கிடுகு கொக்கரை பேரி
தடாரி தின்னரி தவண்டை மல்லாரி
தம்புருவீணை தாள மத்தள மும்

பம்பை காகளம் பஞ்ச நாதமும்
சகல வாத்தியச் சங்கீத மேளமும்
முகில் கெர்ச்சனையின் முழக்கம் போலும்
வெகுவித கோஷ்ட வெடி மத்தாப்பும்
திகுதிகு வென்னும் தீபச் சோதியும்
பற்பல வர்ண பாணங்கள் எரிய
அற்புதப் பொன்மலர் அமரர்கள் சொரிய
கணிகையர் நடிக்கக் கவரிகள் வீச
மணிமுடி சொலிக்க மாமறை பேச
விதி மகபதியும் வியாச பராசரும்
கதிர்மதி சமதக்கினி கௌசி கரும்
வசிஷ்ட நாரத துருவாச காசிபரும்
ததீசிகும்ப கௌதமர் வான்மீ கரும்
உரகர் தயித்தியர் உடுக்கள் அசுரரும்
சுரர் ராக்கதரும் சூழ் பைசாசரும்
புகழ் கின்னரா கிம்புருடர் கருடரும்
மகுட மன்னரும் மண்டலத் தோர்களும்
தேடிநின் பாதம் தெரிசனம் செய்ய
ஓடிநீ வருவாய் உலகங்கள் உய்ய
பகவதி கௌரி பரம கல்யாணி
சகல வேத சாஸ்திர புராணி
மித்துரு பாலி மிருது பாஷனி
சத்துரு விநாசனி சர்வ பூஷணி
ஆவேஸ் ஆவேஸ் அகோர ருத்திரி
ராவே ராவே ரண வீரபத்திரி

அண்ட ரண்டம் அடங்கலும் அதிக
கண்ட கிரகங் கதறிப் பதர
வாதுகள் புரியும் வஞ்சக முனியும்
சூதுகள் பேசும் சுடுகொள்ளிப் பேயும்
இருளன் கருப்பன் இரிசி வீரனும்
குரளி மாடன் குட்டிச் சாத்தானும்
ஏவல் கிரகமும் எதிரிப் பார்வையும்
காவல் பூதமும் கள்ளப் பிசாசும்
பில்லி சூனியம் பிரமராட் சசமும்
சல்லியந் தொட்டியம் சத்துரு பகையும்
மோகினி யோகினி முனிகாட்டேரியும்
காகினி டாகினி சர்வ கிரகமும்
உந்தம் பேர்சொல்ல ஒடுங்கி நடுங்கி
வந்தனம் புரிந்து வாய்கை யடங்கி
விடுவிடு விடுவென வீரிட் டோடிட
கெடுகெடு கெடுகெடு கெர்ப்பங் கலங்கிட
பிடிபிடி பிடிபிடி பிதிர் கலங்கிட
அடிஅடி அடிஅடி அலறி யோடிட
வெங்கை யடப்பான் விதும்பு கோமாரி
கக்குவான் விக்கல் கட்டி வைசூரி
மாந்தை சுரமும் மண்டை குடைச்சலும்
வாந்தியு மேக வட்டையரை யாப்பும்
சக சன்னிமுகசன்னி சூதக சன்னியும்
மகோதரம் பாண்டு மார்நோய் கிரந்தியும்
திம்புகள் செய்யுந் திருடர் பாதையும்

பாம்புதேள் பூரான் பலகடி விஷமும்
ஜால மெட்சணி சகல கிரகமும்
பால கிரகமும் பலவித தோஷமும்
அகிலத் திலுள்ள அனந்த பிணிகளும்
சகல பாவமும் சகல பீடையும்
பரிகரி பரிகரி பஞ்சாட் சரத்தால்
எரிஎரி எரிஎரி ஏகாட் சரத்தால்
சுந்தரி பந்தகா சூர சம்மாரி
அந்தரி சிந்தித் தவர்க் கருள்வீரி
சிவசிவ சிவசிவ சிவசங் கரியே
நவ வடிவான நாரா யணியே
ஆதி யனாதியும் அந்தமும் நீயே
சோதிச் சுடராய்ச் சூழ்ந்தவள் நீயே
நவ்வு மவ்வுமாய் நடிப்பவள் நீயே
சிவ்வு வவ்வுமாய்ச் சேர்ந்தவள் நீயே
யவ்வு முவ்வுமாய் அமர்ந்தவள் நீயே
உவ்வு அவ்வுமாய் உதித்தவள் நீயே
விந்து நாதமாய் விளங்குவை நீயே
தந்தை தாயுமாய்த் தழைத்தவள் நீயே
இடைபிங் கலையில் இருப்பவள் நீயே
கடைசுழி முனையில் கலப்பவள் நீயே
முச்சு டராகி முளைத்தவள் நீயே
உச்சிக்கு வெளியில் உலவுவள் நீயே
மூலத்தில் நின்ற முதல்வியும் நீயே
ஜாலங்கள் புரியும் சமர்த்தியும் நீயே

ஓரெழுத்தான ஒளிவெளி நீயே
ஈரெழுத்தான ஈஸ்வரி நீயே
மூவெழுத்தான முக்கண்ணி நீயே
நாலெழுத்தான நாயகி நீயே
அஞ் செழுத்தான அம்மணி நீயே
பஞ்ச கிருத்தியம் படைத்தவள் நீயே
ஐவராங் கர்த்தருக் கன்னையும் நீயே
ஐயாறு மூவே ழட்சரி நீயே
ஊமை யெழுத்தோ டொத்தவள் நீயே
ஆமை யுருவாய் அமர்ந்தவள் நீயே
அரு வுருவான அற்புதம் நீயே
குருவாய் விளங்கும் கோலமும் நீயே
சின் மயமா கச்செறிந்தவள் நீயே
தன் மயமாகத் தனித் தவணியே
வேதாந்த மான விளைவும் நீயே
நாதாந்த மான நவரசம் நீயே
வேற்றுமை யில்லா வித்தகி நீயே
நாற்பத்து முக்கோண நாயகி நீயே
பரியாய் முச்சந்திப் பாய்ச்சலும் நீயே
துரியா தீதத் தோற்றமும் நீயே
அரனோடு அரியாய் அமர்ந்தவள் நீயே
பரனோடு பரையாய் பதிந்தவள் நீயே
மோன பாத்திர முடிவும் நீயே
ஞான க்ஷேத்திர நவநிதம் நீயே
நடு நிலையான நாயகம் நீயே

கொடுவினை மாற்றும் குண்டலி நீயே
சுத்த சிவத்தில் ஜொலித்தவள் நீயே
சத்தி சிவமாய்ச் சார்ந்தவள் நீயே
சுக சொரூப சூழ்ச்சியும் நீயே
அகண்ட பூரணம் ஆனவள் நீயே
வேலனை ஈன்ற விளக்கொளி நீயே
வாலைத் திருமகள் வாணியும் நீயே
கன்னிகை யாம் சிவகாமியும் நீயே
அன்னை யாம்வடி வம்மையும் நீயே
ஆட்சி நீலாய தாட்சியும் நீயே
சூட்சி சிவகம லாட்சியும் நீயே
நாரணி யாம் மீனாட்சியும் நீயே
ஆரணி யாம் விசாலாக்ஷியும் நீயே
கன்னிகள் பத்ர காளியும் நீயே
மன்னுந் துர்க்கி மாரியும் நீயே
எந்திர வித்தைகள் எல்லாம் நீயே
மந்திர சொரூப மவுலியும் நீயே
மாய குண்டலி மனோன்மணி நீயே
ஆயிரம் நாமம் ஆனவள் நீயே
அனந்த வடிவாய் அமைந்தவள் நீயே
மனம் வாக்குக் கெட்டாமகமாயி நீயே
சர்வ சம்மார சத்தியும் நீயே
சர்வானுக் கிரக சமர்த்தியும் நீயே
என்னுளம் அதனில் இருப்பவள் நீயே
மன்னுயிர்க் குயிராய் மருவிய தாயே

ஆம்ஊ மென்ற அகார ரூபி
ஓம்ரீ மென்ற உகார சொரூபி
சிங்கிலி வங்வங் சிவயநம
வங்கிலி சிங்சிங் வயநமசி
யங்கிலி உங்உங் யநமசிவ
நங்கிலி யங்யங் நமசிவய
மங்கிலி றிங்றிங் மசிவயந
உங்கிலி அங்அங் ஓம்நமசிவய
வசியவசிய சிவ வசிய வேகாட்சரி
வசியவசிய சிவ வசிய திரியாட்சரி
வசியவசிய சிவ வசிய பஞ்சாட்சரி
வசியவசிய சிவ வசிய சடாட்சரி
வசியவசிய சிவ வசிய வஷ்டாட்சரி
வசியவசிய சிவ வசிய பீஜாட்சரி
வசியவசிய சிவ வசிய புவனேஸ்வரி
வசிய வசிய சிவ வசிய ராஜேஸ்வரி
வசிய வசிய ஐயுங்கிலியும்
வசிய வசிய வளர் மெய்ச் சவ்வும்
ஓங்கிலி றீம் ஓரெழுத்தாளே
றீங்கிலி அஃஹ ஈரெழுத்தாளே
அகிலாண்ட வல்லி அம்பிகை யாளே
மகிமை சேர் கச்சி மாநக ராளே
கனகம் பொழி திருக்காம கோட்டத்தி
மனங்கவர் காயத்திரி மாமண்டபத்தி
ஓங்காரகோணத் தொளிர் பத்மா ஜனத்தி

நீங்காத நீலநிறத்தி சதுர் புஜத்தி
காணறும் பிலா காச பீடத்தி
சேணுயர் துவஜ சிகர கோபுரத்தி
தகவுறு தர்மசந் தான ஸ்தம்பத்தி
திகழறத்தி பஞ்ச தீர்த்த பூதத்தி
வெற்றி ஸ்தம்பம் விளங்கும் ஆலயத்தி
பற்றற்றவர் பணி பொற் பதத்தி
தலம்புகழ் சங்கரா சாரிய ரென்னும்
வலம்புரிந் தேத்தி வண்மையா யின்றும்
ஒருபுடை மருவ உளமகிழ் நீலி
திருமகள் கலைமகள் தினந் தொழுஞ்சூலி
காமக்கண்ணி கௌரி கமலாட்சி
தாமத மின்றித் தந்தருள் காட்சி
கருவா யன்னையின் கர்ப்பத்திருந்து
உருவாய்ப் புவியில் உதித்து வளர்ந்து
தையலர் வலையிற் தயங்கி விழுந்து
பொய்ம்மொழிச் சூது பொறாமை மிகுந்து
வறுமை எனும் நோய்வந்து புகுந்து
உறுதியில் என்னுடல் உலர்ந்து மெலிந்து
பூனைவாய்ப்படும் பூங்கிளி போலும்
மாநிலந் தன்னில் மைந்தன் மென்மேலும்
ஆதர வின்றி அம்மணி யுன்றன்
பாத கமலம் பணிந்தனன் என்றன்
வேதனைதீர்த்து இவ் வேளை வந்தாதரி
மாதரி வீரி மசான ருத்திரி

சிறுவன்கோட்டையன் செப்பிய அகவல்
பெறுதிமென்மேலும் பேசுமிந் நிலத்தில்
சகலரும் படித்துச் சந்தோஷ முற்று
சகலசித்தியும் சத்தியும் பெற்று
பக்குவமாக நின் பதமலர் போற்ற
சக்ரேஸ்வரி நீ சந்ததந் தோற்ற
போற்றி போற்றி பொன்னடி போற்றி
யேத்தி யேத்தி இணையடி யேத்தி
காத்தருள் காமாக்ஷி நின்கழலடி போற்றி

—ஸ்ரீகாமாக்ஷி அம்பாள் அகவல் ஸம்பூர்ணம்—

கலிவிருத்தம்

ஐயெட்டு மூன்று மாம் பெரு மெந்திரம்
வையந் தன்னில் வழியுணர் பூஜனை
செய்பவர் நெஞ்சந் தேருமை தோன்றியே
கைவல்ய மாகக் கருணை செய்வாளே.

வாழ்த்து

வாழி மான் முதல் வானவர் வாழியே
வாழி மாது காமாட்சியார் வாழியே
வாழி மாமகள் பாமகள் வாழியே
வாழி மாநில மாதவம் வாழியே.

துக்க நிவாரண அஷ்டகம்

மங்கள ரூபிணி மதியணி சூலிணி மன்பத பாணியளே;
சங்கடம் நீக்கிடச் சடுதியில் வந்திடும் சங்கரி சௌந்தரியே;
கங்கண பாணியன் கனிமுகங் கண்டநல் கற்பகக் காமினியே
ஜெயஜெய சங்கரி கௌரி கிருபாகரி துக்க நிவாரணி காமாக்ஷி

கானுறு மலரெனக் கதிர்ஒளி காட்டிக் காத்திட வந்திடுவாள்
தானுறு தவஒளி தாரொளி மதியொளி தாங்கியே வந்திடுவாள்
மானுறு விழியாள் மாதவர் மொழியாள் மாலைகள் சூடிடுவாள்
ஜெயஜெய சங்கரி கௌரி கிருபாகரி துக்க நிவாரணி காமாக்ஷி

சங்கரி சௌந்தரி சதுர்முகன் போற்றிடச் சபையினில் வந்தவளே
பொங்கரி மாவினில் பொன்னடி வைத்துப் பொருந்திட வந்தவளே
எம்குலந் தழைத்திட எழில்வடிவுடனே எழுந்தநல் துர்க்கையளே
ஜெயஜெய சங்கரி கௌரி கிருபாகரி துக்க நிவாரணி காமாக்ஷி

தணதண தந்தண தவிலொலி முழங்கிடத் தண்மணி நீவருவாய்
கணகண கங்கண கதிர்ஒளி வீசிடக் கண்மணி நீவருவாய்;
பணபண பம்பண பறையொலி கூவிடப் பண்மணி நீவருவாய்
ஜெயஜெய சங்கரி கௌரி கிருபாகரி துக்க நிவாரணி காமாக்ஷி

பஞ்சமி பைரவி பர்வத புத்திரி பஞ்சநல் பாணியளே;
கொஞ்சிடும் குமரனைக் குணமிகு வேழனைக் கொடுத்தநல் குமரியளே
சங்கடம் தீர்த்திடச் சமரது செய்த நற்சக்தியெனும் மாயே
ஜெயஜெய சங்கரி கௌரி கிருபாகரி துக்க நிவாரணி காமாக்ஷி

எண்ணியபடி நீயருளிட வருவாய் எம்குல தேவியளே;
பண்ணிய செயலின் பலனது நலமாய்ப் பல்கிட அருளிடுவாய்;
கண்ணொளி யதனால் கருணையே காட்டிக் கவலைகள் தீர்ப்பவளே
ஜெயஜெய சங்கரி கௌரி கிருபாகரி துக்க நிவாரணி காமாக்ஷி

இடர்தரு தொல்லை இனிமேல் இல்லையென்று நீசொல்லிடுவாய்
சுடர்தரு அமுதே சுருதிகள் கூறிச் சுகமது தந்திடுவாய்;
படர்தரு இருளில் பரிதியாய் வந்து பழவினை ஓட்டிடுவாய்;
ஜெயஜெய சங்கரி கௌரி கிருபாகரி துக்க நிவாரணி காமாக்ஷி

ஜெயஜெய பாலா சாமுண்டேஸ்வரி ஜெயஜெய ஸ்ரீதேவி
ஜெயஜெய துர்க்கா ஸ்ரீபரமேஸ்வரி ஜெயஜெய ஸ்ரீதேவி
ஜெயஜெய ஜெயந்தி மங்களகாளி ஜெயஜெய ஸ்ரீதேவி
ஜெயஜெய சங்கரி கௌரி கிருபாகரி துக்க நிவாரணி காமாக்ஷி

— துக்க நிவாரண அஷ்டகம் ஸம்பூர்ணம் —

அபிராமியம்மைப் பதிகம்

சகலசெல் வங்களுந் தரும் இமய கிரிராச
தனயைமா தேவி நின்னைச்
சத்யமாய் நித்யமுள் ளத்தில்து திக்கும் உன்
தமருக்(கு) இரங்கி மிகவும்
அகில்மதில் நோயின்மை கல்வி தன தானியம்
அழகு புகழ் பெருமை இளமை
அறிவு சந்தானம் வலி துணிவு வாழ்நாள் வெற்றி
ஆகு நல்லூழ் நுகர்ச்சி
தொகைதரும் பதினறு பேறும்தந் தருளிநீ
சுகானந்த வாழ்வ ளிப்பாய்
சுகிர்தகுண சாலிபரி பாலி அநுகூலி திரி
சூலி மங்கள விசாலி
மகவுநான் நீதாய் அளிக்கொணு தோமகிமை
வளர் திருக் கடவூரில் வாழ்
வாமிசுப நேமிபுகழ் நாமிசிவ சாமிபுகழ்
வாமிஅ பிராமி உமையே.

உ

ஸ்ரீ சக்தி மந்திரப் பெருமை

ஆதியிற் றுருவா சர்க்கிங் கம்பிகை யுபதேசித்த
சோதி ஸ்ரீவித்தை யென்றுஞ் சொல் பிர்ம்ம வித்தை
யென்றும்
நீதியாயுணர்ந்த மேலோர் நிலையறிந் தேத்து ஞான
மாதிரு கழலை என்றும் மறவாமற்றுதி செய்வோமே.

சுருதியின் முடிவா மென்றுஞ் சூக்ஷமாம் ரகசிய
மென்றும்
கருதுபூ பிரஸ்த மென்றுங் காணறு மேரு வென்றுந்
திருவருள் தரு நாற்பத்துத்திகழு முக்கோணமென்றும்
பெரும் பொருள் அறிந்தோ ரெல்லாம் பேசுவார்
மற்றோர் பேசார்.

சற்குணர் புகழுஞ் சங்கராச்சாரிய ரவர்கள் சொன்ன
அற்புத மிகுந்த சவுந்தரிய லகரி தன்னை பன்னுள்
கற்றுணர் முதியோர் சொல்வர் கண்ணிருந்தறிய
வொண்ணு
அற்பர்களறியா ரென்றே யறைந்தன ரறிஞர் தாமே.

ஸ்ரீ சக்தி அச்சகம், காஞ்சிபுரம்-3.